**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 388/2022** |
| **Ranking of witness** | **:** | **PW3** |
| **Name** | **:** | **தியாகராஜன்** |
| **Father's Name** | **:** | **த/பெ. பன்னீர்செல்வம்** |
| **Age** | **:** | **49** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22-10-2025.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையானார்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது நல்லம்பள்ளியில் குடியிருந்து அரசு பேருந்து நடத்துநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு, நல்லம்பள்ளியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி அருகே ஏற்பட்ட விபத்தில், எங்கள் ஊரைச்சேர்ந்த ஒருவர் காயம்பட்டு, இறந்துவிட்டதாக நான் கேள்விப்பட்டேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த இடத்தில் விபத்தானது காலை சுமார் 11.30 மணிக்கு மேல் நடந்ததாக நான் கேள்விபட்டேன். மாலையில் நான் அந்த இடத்தில் இருந்தபோது, போலீசார் அங்கு வந்தார்கள். ஆனால், தனிப்பட்ட முறையில் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை, பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி வழங்கப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் சுமார் 13 ஆண்டுகளாக நடத்துநராக பணிபுரிந்து வருகிறேன். நான் 13 ஆண்டுகளாக பாரதிபுரம் தமிழ்நாடு போக்குவரத்து கழக டிப்போவில் இருந்து பணிசெய்கிறேன். அங்குதான் எனக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட அரசு பேருந்து தடம் எண் 1A என்றால் சரிதான். அந்த பேருந்து இலளிகத்திலிருந்து தருமபுரி வரை செல்லும் பேருந்து என்றால் சரிதான். அவ்வாறு இலளிகத்திலிருந்து தருமபுரி நோக்கி வரும்போதுதான், விபத்து ஏற்பட்டது. அரசு பேருந்து 1A டவுன் பஸ் என்பதால், அதன் டெப்போ எங்கு இருக்கும் என்றால், தருமபுரி நான்கு ரோட்டில் உள்ள தமிழ்நாடு போக்குவரத்து கழக டிப்போவை சேர்ந்ததாகும். நகர பேருந்து டிப்போவை சேர்ந்த நடத்துனர் மற்றும் ஓட்டுநர்களை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. ஒரே துறையை சேர்ந்த ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களை எனக்கு தெரியாது என்று வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி பெயர் மாதையன் என்பதும், அவர் கடந்த 17.01.2021ஆம் தேதி மாலை 04.20 மணிக்கு இலளிகம் – நல்லம்பள்ளி சாலையில் 1A தடம் எண் கொண்ட TN29-N-2382 என்ற பதிவெண் கொண்ட நகர பேருந்தை

ஓட்டி வந்தபோது, நல்லம்பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள மணி என்பவரது மளிகை கடை அருகில், சைக்கிளை தள்ளி சென்றுகொண்டிருந்த சீதாராமன் என்பவர் மீது மோதி, விபத்தை ஏற்படுத்தியதில், பேருந்தின் டயர் ஏறியதில் தலை நசுங்கி சீதாராமன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், இந்த சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், ஆம்புலன்ஸ் மூலம் இறந்தவரின் உடலை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்க உதவியாக இருந்தேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஆஜர் எதிரி, நான் பணிபுரியும் போக்குவரத்து துறையில் ஓட்டுநர் என்பதாலும், அவரை எனக்கு நீண்ட நாட்களாக தெரியும் என்பதாலும், அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அவரை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

விபத்து சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அழைப்பாணையின் பேரில்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

<u>**மறுவிசாரணை :**</u> இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**தருமபுரி.**

**சாட்சியின் கையொப்பம்.**